கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர் (திருமதி) த.செந்தமிழ்ச் செல்வி,
எம்.எஸ்.சி.,எம்.பில்.,பி.எச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

1. பதிவாளர் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
2. பதிவாளர் காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.
3. பதிவாளர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
4. பதிவாளர் பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
5. பதிவாளர் பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.
6. பதிவாளர் மதர் தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.
7. பதிவாளர் அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
8. பதிவாளர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.
9. பதிவாளர் பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
10. பதிவாளர் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை–5.
11. பதிவாளர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர், கண்டிகை, வண்டலூர் அஞ்சல்.

ந.க.எண் 22217/ஆர்3/2013 நாள் 18.06.2013

அய்யா/அம்மையீர்,

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – சுயநிதிக் கல்லூரிகள் – சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறிஸ்தவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்க்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிக்களுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கல்விக் கட்டணங்கள் மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள் போன்றவற்றை திரும்ப வழங்குவது – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 6/ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதி.ந–3) துறை நாள் 09.01.2012.
2. அரசாணை (நிலை) எண் 92/ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதி.ந–3) துறை நாள் 11.9.2012.
3. ஆதி திராவிடர் நலத்துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண். அய்1/23643/09 நாள் 21.05.2013 மற்றும் 10.06.2013.

பார்வையில் 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளில் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண குழு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணங்களை மட்டும் அவர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் மாணவர்களுக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டு அதனை திறம்பட செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பார்வை 3ல் காணும் ஆதி திராவிட நல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மைய அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெறும் ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு அவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்கும் ஆதி திராவிடர் மாணவர்களையும் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருக்கும் பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களையும் நிரந்தர ஜாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் (சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து கடைசி ஆறுமாத காலத்திற்குள் பெற்றிருக்கப்பட வேண்டும்) (Orignal & Attested Xerox Copy) மாணவர் சேர்க்கையின் பொழுது மாணவர்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தி மாணவர் சேர்க்கை அழைப்புக் கடிதம் (Admission Call Letter) மற்றும் மாணவர் சேர்க்கை தொடர்பான விளம்பரங்களில் இத்தகவலை மாணவர்களுக்கு அளிக்கவும், மாணவர் சேர்க்கையின் பொழுது தகுதியுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவர்களிடமிருந்து கண்டிப்பாக கல்விக் கட்டணங்களை வசூலிக்கக் கூடாது என உரிய அறிவுரைகள் வழங்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே அனைத்து சுயநிதி கல்லூரிகளிலும் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ மாணவ/மாணவியர் பயனடையும் வகையில் இச்செயல்முறை மற்றும் அரசாணைகளை தங்களின் பல்கலைக்கழக இணைய தளத்தில் வெளியிட்டும், குறிப்பாக தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் சுயநிதி அடிப்படையில் செயல்படும் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/கல்வியியல் கல்லூரிகள்/உடற்கல்வியியல் கல்லூரிகள் முதல்வர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அரசாணையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் சுயநிதி

கல்லூரிகள் உள்ள அனைத்து துறைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டவும், அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தகுதியுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவ/மாணவியர்களின் பெயர் விவரம், படிக்கும் வகுப்பு, சாதிப்பிரிவு, கட்டண விவரம் மற்றும் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ஆகிய விவரங்களை உரிய ஆதாரங்களுடன் தொகுத்து மொத்த கேட்புத் தொகையை ஒவ்வொரு கல்லூரி முதல்வரும் சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தங்கள் பல்கலைக்கழகத்தில் இன்றைய நிலையில் (2013–2014 கல்வியாண்டு) இணைவு பெற்று நடைபெறுகின்ற சுயநிதிக் கலை அறிவியல் கல்லூரிகள்/கல்வியியல் கல்லூரிகள்/உடற்கல்வியியல் கல்லூரிகளின் பட்டியலையும் அங்கீகரிக்கப்பட்ட பாடப்பிரிவு விவரங்களையும் இயக்குநருக்கு உடன் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ வகுப்பை சார்ந்த மாணவர் குறித்த விவரங்கள் எதுவும் விடுபடாமலும் அவர்களது சாதி மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமானம் போன்றவற்றின் உண்மைத் தண்மை குறித்தும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அறிவிக்க வேண்டுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

நகல்
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.